நவாலி

# ஸ்ரீ கதிர்காம முருகன் கோயில்



# கும்பாபிஷேக மலர்

20.06.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகக் காட்சிகள்




பிள்ளையார் கோயில் ஸ்தூபி



முருகன் கோயில் மூலஸ்தான ஸ்தூபி



ஆறுமுகப்பெருமான் ஸ்தூபி



திருவாயில் முகப்புத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின்

# ஆசிச்செய்தி

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

முருகன் அடியார்களுக்கு,

நவாலியில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீகதிர்காம முருகனுக்கு நடைபெற்ற கும்பாபிஷேகத்தை சிறப்புச் செய்யும் வண்ணம் மலர் வெளியிடுவதனை இட்டு மகிழ்ச்சியடைகின்றோம். "மருவும் அடியார்கள் மனதில் விளையாடும் மரகத மயூரப் பெருமாள்" எனப் போற்றப்படும் முருகப் பெருமானுக்கு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிஷேகம் நடைபெற்றமை ஊருக்கும் மக்களுக்கும் புனிதத்தை ஏற்படுத்தியதாகும். இலங்கை வரலாற்றில் முருக வழிபாடு நீண்ட காலமாக அமைந்துள்ளது. கதிர்காம முருக வழிபாடு அன்பின் அடையாளம், மௌன வழிபாடாகவும் அமையப் பெற்றது. எந்நிலையிலிருந்து எவ்வகை வழிபாடு செய்தாலும் அருளைத் தரக்கூடிய வழிபாடாகும். இதனை மையமாகக் கொண்டு நவாலி ஸ்ரீகதிர்காம முருகன் ஆலயம் அமைந்துள்ளது. சமாதியுடன் கூடிய இந்த ஆலயம் தனித்துவமான சிறப்பினை உடையது. கலியுகத்திற்கு தெய்வமாகத் திகழும் முருகப் பெருமான் இவ்வாலயத்தில் வேண்டுவார் வேண்டுவதை அருள்பவனாக, இம்மைக்கும் மறுமைக்கும் புண்ணியத்தை தரக்கூடியவனாக உள்ளார். அப்பெருமானை வழிபாடு செய்து அனைவரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக. மலர் அனைவருக்கும் பயன் உள்ளதாக சிறப்பாக அமைய இறை அருளைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**இதுவரை நடைபெற்ற கும்பாபிஷேகங்கள்**

முதலாவது கும்பாபிஷேகம் - 1960
இரண்டாவது கும்பாபிஷேகம் (பங்குனி 22ஆம் நாள் அனுஷம்) - 05.04.1999
மூன்றாவது கும்பாபிஷேகம் (விகிர்தி ஆண்டு, ஆனி 05ஆம் நாள், அவிட்டம்) - 20.06.2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருத சிரேஷ்ட விரிவுரையாளர் அவர்களின்

# ஆசிச்செய்தி

ஸ்ரீபதி சர்மா கிருஷ்ணானந்தசர்மா
*B.A.(Hons.), M.Phil*
சிரேஷ்ட விரிவுரையாளர்
சமஸ்கிருதத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

பிரதமகுருவும் பரிபாலகரும்
சிவன் கோவில்,
நல்லூர்.

எங்கும் நீக்கமற வியாபித்திருக்கும் இறைவனின் திருவருளைப் பெற்று, இகபர சுகங்களைப் பெற்று ஆன்மாக்கள் கடைத்தேறுவதற்குச் சாதனமாக விளங்குபவை ஆலயங்கள். தொன்று தொட்டு இலங்கைத் திருநாட்டில் முருக வழிபாடு எமது சமய பண்பாட்டு மரபில் சிறந்து விளங்குவதாகும். பல முருகன் ஆலயங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்ற யாழ்ப்பாணத்தின் நவாலிப் பகுதியில் அருள் வழங்கிக் கொண்டிருக்கின்ற ஸ்ரீகதிர்காம முருகன் ஆலயம் ஓர் தனித்துவமான வரலாற்றுச் சிறப்புடையதாகும்.

1956ஆம் ஆண்டு இன்னல்கள் நிறைந்த காலப் பகுதியில் சந்நிதி முருகனின் அருட்துணையோடு நடைப் பயணமாகக் கதிர்காமத் தலத்திற்கு தலயாத்திரை மேற்கொண்ட இராசமணி என்னும் அம்மையாருக்கு மாணிக்க கங்கைக் கரையில் இறையருள் மூலம் கிடைத்த அருள்வேலை நவாலிப் பகுதியில் பிரதிஷ்டை செய்து ஸ்ரீகதிர்காம முருகன் ஆலயம் எனப் பெயரிட்டு முதலில் 60ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நிகழ்ந்து, அடுத்து 99ஆம் ஆண்டு ஓர் புனருத்தாரண கும்பாபிஷேகம் நடத்தப் பெற்றது. தற்போது பல திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு இவ்வாண்டு சிறப்பானதொரு மஹாகும்பாபிஷேகம் நிகழ்ந்துள்ளமை ஆலயத்தின் வளர்ச்சி நிலையையும் அருட் சிறப்பினையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இராசமணி அம்மையாரின் அருட்சிறப்பினாலும் வழிபடும் அடியவர்களின் பிரார்த்தனைகளாலும் சிறந்துள்ள இந்த ஆலயம் மரபுவழி வந்த வழிபாட்டு முறைகள் மற்றும் அடியவர்களின் நேர்த்திக் கடன்கள் முதலியன மூலம் பக்தி நெறிக்குச் சிறந்த ஓர் எடுத்துக் காட்டாகவும் விளங்குகின்றது.

தற்போது சமாதி நிலையடைந்த இராசமணி அம்மையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தடவை யோகர் சுவாமி அவர்களைச் சந்திக்கச் சென்ற வேளை "குமரகுருபர முருகா வருக" என யோகர்சுவாமிகள் அம்மையாரை விழித்துக் கூறியமையே அம்மையார் முருகன் திருவருள் பெற்றமையை வெளிப்படுத்துவதாக உள்ளது.

சக்தியின் அம்சமாக விளங்குகின்ற வேலைத்தரித் துள்ளமையால் முருகன் சக்திதரன் எனப் போற்றப்படுகின்றான். கௌமார வழிபாட்டு மரபில் வழிபடும் தெய்வமாக விளங்கு கின்ற சுப்பிரமணியன் கந்தனின் ஓர் வடிவமாகப் போற்றப் படுபவர். ஆனந்தமான மேலான வஸ்துவிலிருந்து தோன்றி ஒளிர்பவர்; ஞான வடிவினர். பிரம்மத்தை உபாசிப்பவர்களுக்கு சிவனிலும் மேலான தெய்வமாக விளங்குகின்ற இவர் சிவப்பரம் பொருளுக்கு வேறானவரல்லர். முருக வழிபாடு இனிமையான பேரின்பத்தில் திளைக்கச் செய்து மேலான ஞான இயல்பை வளர்க்கும் தன்மையுடையது. ஆன்மாக்களின் அக இருளையும் அனைத்துலகிலுள்ள இருளையும் போக்குகின்ற கோடி சூரிய னுடைய ஒளிக் கிரணங்களை யுடையவரும், தேவருலகைக் காப்பாற்றுபவரும் விண்ணுக்கும் மண்ணுக்குமுரிய தெய்வமாகப் போற்றப்படுகின்ற கலியுக வரதனான ஸ்ரீகதிர்காம ஞான வேலவனின் திருவருட் சிறப் பினையும் வரலாற்றையும் வெளிக் கொணர்கின்ற வகையில் வெளி யிடப்படுகின்ற மஹாகும்பா பிஷேக மலர் சகல நிலைகளிலும் சிறப்புற அமைந்து கதிர்காம வேலவனின் வழிபாட்டு மரபு களும், அடியவர்களின் பக்தியும் மேன்மேலும் சிறப்புற்று ஓங்கவும், கதிர்காம முருகனின் திருவருளி னால் அடியார்கள் வாழ்வு சிறக்கவும் பிரார்த்திக்கின்றோம்.

"வந்த வினையும் வருகின்ற வல்வினையும் கந்தனென்று சொல்லக் கலங்குமே."

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வே டிருக்கைவேல் - வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்த வேலுண்டே துணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செஞ்சொற் செல்வரின்
# ஆசிச்செய்தி

ஆறு. திருமுருகன் B.A.
தலைவர்
சிவபூமி அறக்கட்டளை
தலைவர்
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

சைவத் தமிழர்களின் பாரம்பரியமான திருவூர் நவாலி. கல்விமான்கள், கலைஞர்கள், விவசாய விற்பன்னர்கள் நிறைந்த பெரும்பதி நவாலி. இத்திருவூரில் ஸ்ரீகதிர்காம முருகன் ஆலயம் என்னும் அருட்தலம் கீர்த்திமிக்க திருத்தலம் என்றால் மிகையாகாது. யாழ்குடா நாட்டிலிருந்து கதிரமலை நாதனாகிய கதிர்காமக் கந்தனை நோக்கி கால்நடையாகச் சென்று வழிபடும் மரபு எம் முன்னோர் வழிபாட்டுப் பாரம்பரியத்தில் முக்கிய இடம் பெற்றிருந்தது. இந்நிலையில் முருகனை அகத்தில் சுமந்து வழிபாடு செய்த திருமதி. இராசமணி சண்முகம் என்ற அன்னைக்கு முருகன் காட்சி கொடுத்து ஆட்கொண்டதன் விளைவாக ஏழுச்சி பெற்ற இத்திருக்கோவில் பிணி தீர்க்கும் ஆலயமாக பிரபல்யம் பெற்றது. கதிர்காமக் கந்தனுடன் அடியார் பிணி தீர்க்க பேசும் சக்தி பெற்ற அன்னையிடம் பக்தர்கள் மதிப்புக் கொடுத்தனர். ஆலயம் அருள் நிலையமாக துரித வளர்ச்சி கண்டது. வேலைக் கும்பிடுவதே எமக்கு வேலை எனப் பலர் நாடித் தேடி வழிபட்டனர். தவத்திரு யோகசுவாமிகள் கூட அருள்பெற்ற அம்மையாரை நோக்கி கதிர்காமத்தான் உனக்கு துணை நிற்க பிறகு என்ன குறை எனக் கூறியதாக வாய் மரபாகப் பக்தர்கள் கூறி வருகிறார்கள் இப்புனித திருக்கோவில் காலத்துக்குக் காலம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நிறைவேற்றும் ஒழுங்கில் இவ்வாண்டு திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற இருப்பது அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன். கூறும் அடியார்கள் குறை தீர்க்கும் குமரவேலனின் மகா கும்பாபிஷேகம் சிறக்கப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகிறேன்.

"யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் எனது அற்றதே பிணக்கு இல்லாத பெருவாழ்வு

திருமதி. மகேஸ்வரி செல்வரத்தினம்

நவாலியம் பதியிலே ஸ்ரீகதிர்காம முருகன் ஆலயத்திலே 20.06.2011 மகா கும்பாபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. 'இராசமணி' என்ற திருநாமம் கொண்ட அம்மையார் திடசங் கல்பத்துடன் கதிர்காம யாத்திரை மேற்கொண்டதும், அவரது பக்தி வைராக்கியம் கதிர்காமக் கந்தனை இங்கு எழுந்தருளச் செய்ததும் யாவரும் அறிந்த உண்மை. அவரது தோற்றப் பொலிவு, "கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும், பனித்த சடையும், பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறுமாய்" அப்பரடிகளின் திருவாக்கை நினை யூட்டியது. அதனால் கவரப்பட்ட தொண்டர்கள் பலர் இங்கு குழுமினர். அவரிடம் விபூதிப் பிரசாதம் பெற்றுத் தீராத நோய்கள் நீங்கினர் பலர். நாளடைவில் அவர் வாழ்ந்த குடில் கோயிலாயிற்று. அவரை "அப்பன்" என்றும் "குருமுருகன்" என்றும் அடியார் கூட்டம் அழைத்து மகிழ்ந்தது. 1960இல் முதலாவது கும்பாபி ஷேகமும், 1999இல் இரண்டாவது கும்பாபிஷேகமும் நிகழ்ந்தது. தற்சமயம் நிகழ்ந்த மகாகும் பாபிஷேகமும் ஆலயத்தின் கவினுறு தோற்றமும் உண்மையில் குரு வருளின் பிரவாகத்துக்கு மாபெரும் சாட்சிகளாகும்.

கும்பம் என்பது நிறைகுடம், தமிழர்களின் மங்கலச் சின்னம். ஆலயத்திலே எல்லா மூர்த்திகளை யும் ஆவாகனம் செய்து வழிபடும் பூஜாஸ்தானமாக விளங்குகின்றது. ஆசாரியார் கும்பத்தைத் தெய்வீகத் திருமேனியாகப் பாவனை செய்து, மந்திரங்களை அதிற் பதித்து, இறைவனை எழுந்தருளச் செய்வர். இதுவே கும்ப பூசையாகும். கும்பத்து நீர் விக்கிரகங்களுக்கு அபிஷேக மாகும் போது, பிம்பத்திலே சேர்த்து, நிலையாக நின்று ஆன்மாக் களுக்கு அருள் புரிய வேண்டும் என்று பிரார்த்திப்பர். இது கும்பாபிஷேக தத்துவமாகும்.

தற்போது வாழ்க்கை வசதிகள் கூடியது; அதனால் தேவைகள் பெருகின. ஆலயங்கள் ஏன்? ஏழை எளியவர்களுக்கு வாழ்வாதாரத் தேவைகளுக்கு உதவினால் போது மானது. பெரிய திருவிழாக்கள், பூசைகள் செய்து பெரிய நிதியைச் செலவிடுவதனால் பயன் என்ன? இது பகுத்தறிவு வாதம். விஞ்ஞானம் வளர்கிறது. மெய்ஞ்ஞானமும் பேருண்மையொன்றை நிறுவிக் காட்டுகிறது. "கொம்பாசில் நீண்ட முனையை ஊன்றி, சிறிய முனை யில் எழுதுகோலைப் பொருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட மிடுகின்றோம்? அது போல ஆன்மா தன் இதயத்துச் சிந்தனையைத் திருவருளில் நிறுத்தித் தன் செயலைச் செய்தால் யாவும் குறைவின்றி நிறைவு பெறும்.

பசுவின் உடலெங்கும் பால் செறிந்துள்ளது; இரத்தத்துடன் கலந்துள்ள நிலையிது. பால் கறக்க வேண்டுமானால் அதன் அடியில் முலைக்காம்புகளைத் தொட்டுத்தான் கறக்கலாம். பசுக்கன்று வாய் வைத்து முட்டியவுடன் பால் சொரிகிறது. வேறெந்த அங்கத்திலும் என்ன மாய வித்தைகள் செய்தாலும் பால் கறக்க முடியாது. இதே போலத்தான் பிரபஞ்சம் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் திருவருளை, இறை சாந்நித்தியத்தை, உணர அனுபவிக்க சித்தத்தை இறைவனிடம் நிறுத்த வேண்டும். உருக்கரந்து எவ்விடத்தும் நிற்கும் பரம்பொருள் வெளிப்பட அருள் வழங்குவது ஆலயத்தில் தான் என்றால் அது மிகையாகாது. "ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே" என்பது சித்தாந்தம் நிறுவிய உண்மை.

நாகரீக சமுதாயத்துக்கு ஜீவநாடி கடவுள் நம்பிக்கை. ஆன்மீக வளர்ச்சி, பரோபகார சிந்தை, புலன் அடக்கம், சுயநல மின்மை, தியாகம் இவையின்றி நாகரீகம் இல்லை. உலகிலே எத்தனையோ காரியங்களுக்காக பொன்னுக்கும், பொருளுக்கும், பட்டத்திற்கும் பதவிக்கும் குட்டிக் கரணம் போடும் மக்கள் திரிகரண சுத்தியுடன் இறைவனைத் தேடுகிறோமா?

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சிலே புக்கு நிற்பவர்" என்று அப்பரடிகள் ஆழமாக எடுத்துரைத்தமை நோக்கற்பாலது.

இந்துமதம் உலகில் உள்ள சமயங்களுள் மிகவும் தொன்மையானது. ஆதியில் இம்மதம் "சனாதனதர்மம்" என்றே அழைக்கப்பட்டது. அதன் பொருள். "என்றும் நிலையான நீதி நெறி" என்பதாகும். இங்கு "மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்" என்ற வரிகள் குறிப்பிடத்தக்கன.

சைவ சமயத்தில் ஏராளமான நூல்கள் உண்டு. வேதம், ஆகமம், புராண இதிகாசங்கள் என வடமொழியில் உள்ள நூல்கள் பல. கற்றோர் மட்டுமன்றி மற்றோரும் விளங்கிக் கொள்ளும் வகையில் தத்துவக் கருத்துக்களைக் கதை வாயிலாக எடுத்தியம்பும் நூல்கள் பல தமிழிலும் உண்டு. அறிவு நெறிக்கு உதவுவன மெய்கண்ட சாஸ்திரங்கள்; அன்பு நெறிக்கு உதவுவன திருமுறைகள். செம்மை சான்ற செல்வர்களால் இயற்றப் பட்டவை இலக்கியங்கள். மனித சமுதாயத்திற்கு அடிப்படையான இலட்சியங்களை இவை எடுத்துக் காட்டுகின்றன. இவற்றில் கடவுள் நெறி அருள் ஒழுக்கம், அறவுணர்வு யாவும் அமைந்து கிடக்கின்றன; ஆத்மாக்களை மகாத்மாக்கள் ஆக்கும் இலக்கியங்கள்.

"கல்விக்குப் பயன் அறிவு; அறிவுக்குப் பயன் ஒழுக்கம்" என்பது நாவலர் அவர்களின் வாக்கு. எனவே பக்தியின் இரு சிறகுகள் ஒழுக்கமும், ஆசாரமும். நியாய வேட்கையும் அந்தரங்க சுத்தியோடு கூடிய சத்திய தரிசனமும் இல்லாத பக்தியால் பயனில்லை. கலியுகத்திலே பக்தி மார்க்கம்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்திக்கு வழி காட்டும் என்று சாஸ்திரங்கள் சொல்லும்.

கலியுகம் பிறக்கப் போகிறது. தர்மம் குன்றும், அதர்மம் ஓங்கும். கலியின் வெம்மையை நாம் எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்று சாதுக்களான முனிவர்கள் அஞ்சுகிறார்கள். விடை உடனே வருகிறது. கந்தப்பெருமானுடைய இணையற்ற கீர்த்தி சகல பாவங்களையும் போக்க வல்லது. அப்பெருமானுடைய சரிதம் கற்பக நிழல்; வெப்பத்தைத் தணிக்கும்.

'கந்தன்' என்ற பதம் ஆன்மாக்களுக்குப் பற்றுக்கோடாக உள்ளவன் என்று பொருள்படும். அதைவிடப் பகைவர்களது பராக்கிரமத்தை வற்றச் செய்பவன் என்ற பொருளும் உண்டு. கந்தபுராணம் எத்தனையோ தத்துவக் கருத்துக்களின் கருவூலம். சிவனிடம் வரங்கள் பல பெற்று சூரபத்மன் ஆட்சி செய்கிறான். தேவர்களைச் சிறைப்படுத்தி சொல்லொணா இம்சைகள் செய்கிறான். தேவர் துயர் தீர்க்க அவதரித்தவர் முருகப்பெருமான், நீதிகள் எடுத்துக் கூறியும் அவன் திருந்தவில்லை. செய்ந்நன்றி கொன்ற சூரனை மறக் கருணையினால் ஆட்கொள்கிறார்; அவனைக் கொல்லவில்லை; சேவலும் மயிலுமாய் இரு கூறாக்கி, தனது கொடியும் வாகனமுமாக சூரனை வாழ்வித்தார்.

"கோலமா மஞ்ஞைதன்னில்
குலவிய குமரன் தன்னைப்
பாலன் என்று இருந்தேன்.....
(முதல் நிலை)

விசுவரூப தரிசனம் கொடுத்தபின் சூரன்

"மாலயன் தமக்கும் மேலானவர்" என்று அறிந்து கொண்டேன் என்ற நிலையிலும் மானாபிமானம் தலைதூக்க அவன் மீண்டும் போரில் ஊக்கம் கொள்கின்றான். "நான் இனித் தளரேன், சூரன் என்ற பேரை நிலைநாட்டுவேன்" என்று நெஞ்சை நிமிர்த்துகின்றான்.

காலா காலமாய் ஆலய தரிசனம் செய்கிறோம். தீர்த்த யாத்திரைகள் செய்கிறோம். பக்தியின் உச்சியில் நின்று கண்ணீர் சிந்தி வழிபடுகிறோம். "அழுதால் உன்னைப் பெறலாமே" என்ற நிலை கிட்டியதா? நின்று ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தால், இந்த நிலைக்குக் காரணமான நோய் 'நான்' என்ற அகங்காரம், 'எனது' என்ற மமகாரமாகும். இவ்விரண்டும் எம்மைவிட்டு அகலாமையால் நாங்கள் வாழ்க்கையில் அல்லற்படுகிறோம். நிம்மதியைத் தேடி நாங்கள் ஓடுகிறோம். இன்னும் வேகமாக நிம்மதி எங்களைவிட்டு ஓடுகிறது. 'நான்', 'எனது' என்ற அகப்பற்றுக்கள், புறப்பற்றுக்கள் இருக்கும் வரை மனித வாழ்க்கையில் பலவேறு சிக்கல்கள் தோன்றுகின்றன. குன்றக்குடி அடிகளார் இக்கருத்தை எடுத்தாளும் பாங்கு இங்கு சிந்தனைக்குரியது. நம்பிக்கையும், நல்லெண்ணமும் பயிலாத நெஞ்சில் பிணக்குகள் தோன்றும். பிணக்குகள் நீங்கினால் மரணமில்லாப் பெருவாழ்வு சித்திக்கும்; மனிதம் வாழும்.

"தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச் சங்கரா — யார் கொலோ சதுரர்?" வினா எழுப்புகிறார் மணிவாசகர். இதில் தானே கெட்டிக்காரரர். ஏனெனில் இதனால் "அந்தமில் ஆனந்தம் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றேன்." என்று மகிழ்ந்து பாடுகிறார். எனவே நாம் இறைவனைச் சார்ந்து விட்டால்; சாரும் வழியை அறிந்து அதில் செல்ல முற்பட்டால் வாழ்க்கை சுமையாகாது. முருகன் எப்படிப்பட்டவர்?

"சுவர்க்க லோக மீகாமன்
சமஸ்தலோக பூபாலன்"
– அது மட்டுமா?

"அடியவர் இச்சையில் எவை எவைஉற்றன அவை தருவித்தருளும் பெருமாள்" என்கிறார் அருணகிரியார். முருகபரத்துவம் விளங்கும் நூல்களுள் கந்தபுராணம் தலைசிறந்தது. இங்கு ஓரிரு பாடல்களை உதாரணங் காட்டுவது பொருத்தமாயிருக்கும். எம்பெருமான் வீரவாகு தேவரைத் தூதாக அனுப்பிய போது,

"ஈசனே அவன் ஆடலால்
மதலை ஆயினன் காண்
ஆசிலா அவன் அறுமுகத்
துண்மையால் அறி நீ
பேசில் ஆங்கவன் பரனோடு
பேதகன் அல்லன்
தேசுலா அவன் மணியிடைக்
கதிர்வருதிறம் போல்"

என்று அறிவுரை கூறுகின்றார்.

தன் தம்பி சிங்கமுகாசூரனை உதவிக்கு அழைத்தபோது

"வேதக் காட்சிக்கும் உப
நிடத்துச்சியில் விரிந்த
போதக் காட்சிக்கும்
காணலன் புதியதில் புதியன்
மூதக்கார்க்கு மூதக்கவன்
முடிவிற்கு முடிவாய்
ஆதிக்காதியாய் உயிர்க்கு
குயிராய் நின்ற அமலன்"

என்று பலவாறு அறிவுரை கூறுகிறான். எல்லாம் ஆணவம் கொண்ட சூரனுக்குச் சிந்தையில் பதியவில்லை. நாம் கற்கும் பாடம் என்ன? பித்த நோய் கொண்டவர்க்கு அறுசுவையுண்டியும் கசக்கும். எனவே, எந்நேரமும் வாழ்க்கை தூயதாக, நன்னெறியில் நிற்க வேண்டும் என்ற குறிக்கோள் இருக்க வேண்டும். "தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் னுற்றால்" என்ற பாடல் எமக்கு நல்ல வழிகாட்டும். நல்வினைப் பயனாக, குருவருட் பேற்றினால் எமக்கு வாய்த்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவோம். எந்நேரமும் கந்தனை வந்தித்து நற்பயன் பெறுவோம்.

## தீமையை வெல்லும் வழி

பன்றியோடு சேர்ந்த பசுக் கன்றும் கெட்டுப் போகும் என்கிறார்களே பசுக்கன்றோடு சேர்ந்த பன்றி திருந்த வாய்ப்பில்லையா என்று பகவான் ராமகிருஷ்ண பரமஹம்சரை ஒருவர் கேட்டார். அதற்கு பகவான் ராமகிருஷ்ணர் பாலோடு சாக்கடை நீர் சேர்ந்தால் பால்தான் கெடும். இரண்டில் எது எதுவோடு சேர்ந்தாலும் தீயவைதான் நல்லவையை ஆட்கொள்ளும். இனிய புல்லாங் குழல் ஓசையை மரணச் சடங்கின் சங்கு வென்று விடும். ஒரு குடம் பாலை ஒரு துளி விஷம் கெடுத்து விடும். ஓர் அறிஞனின் பேச்சை நாலு முட்டாள்களின் கூச்சல் மற்றவர்கள் கேட்க முடியாமல் கெடுத்துவிடும் என்றார்.

"அப்படியானால் தீமையை நன்மையினால் வெல்வது எப்படி" என்றார் கேள்வி கேட்டவர். "ஒரு நாய் உன்னைப் பார்த்துக் குரைக்கும்போது கல்லை எறிந்தால் மேலும் மேலும் குரைக்கும். அதற்கு ஒரு ரொட்டித் துண்டைப் போட்டால் உன்னைப் பார்த்து வாலாட்டும். இதுவே தீமையை வெல்லும் வழி" என்றார் பரமஹம்சர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தகா உன் ஆடல் ஆர் அறிவாரோ!

**திருமதி. பா. சிவனேஸ்வரி**

முருகப் பொருமானோடு நேரிடையாகப் பேசும் அளவு அவனருளில் ஐக்கியப்பட்டிருந்தவர் பாம்பன் சுவாமிகள். கல்வியில் கரையிலாக் காஞ்சித் தலத்தில் பக்தியாறு பெருக்கெடுத்தோடும் சிவாலயங்கள், திருமாலின் திவ்ய தலங்கள், உலகமுய்ய முப்பத்து இரண்டு அறங்களும் செய்த அன்னை காமாட்சியின் தலம் அனைத்தையும் தரிசித்த பாம்பன் சுவாமிகள் அவருடைய அபிமானத் திற்குரிய குமரப்பெருமானின் குமரக்கோட்டத் தலத்தை தரிசிக்கா மலே நேராக ரயில் நிலையத்துக்கு சென்று கொண்டிருந்தார்.

அப்போது தலைப்பாகை அணிந்த சிறுவனொருவன் அவரெதிரே தோன்றி, "பெரியவரே! காஞ்சியில் எல்லாத் தலங்களையும் தரிசித்தாயிற்றா?" என்றான். எனக்குத் தெரிந்தவரை எல்லாத் தலங்களையும் தரிசித்து விட்டேன். "குமரகோட்டத்து முருகனைத் தரிசிக்கவில்லையே" அந்தத் தலம் எங்கிருக்கிறது? அதோ, அங்கே! நான் வழிகாட்டுகிறேன் என்றான் சிறுவன். குமரகோட்டத்து முருக னைத் தரிசிக்க ஆவலாகத்தான் இருக்கிறது. ஆனால் ரயிலுக்கு நேரமாயிற்றே என்று தயக்கத்துடன் கூறினார் சுவாமிகள். "உங்களுக்காக ரயில் நிற்கும்!" என்றான் சிறுவன். ஆர்வத்துடன் சிறுவனைத் தொடர்ந்து சென்றார். குமர கோட்டத்துக்கு அருகாமையில் சென்ற சிறுவன் திடீரென மறைந்து விட்டான். அப்போதுதான் பாம்பன் சுவாமிகளுக்குப் புரிந்தது வந்த சிறுவன் தன்னை ஆட்கொள்ள வந்த முருகப்பெருமானே தான் என்று! தன்னை அழைத்து ஆட்கொண்ட குமரப்பெருமானைப் போற்றி வழிபட்டுவிட்டு, ரயிலடிக்கு வந்த பின்னரே அந்த ரயிலும் தாமத மாகவே வந்தது. பக்தர்களுக்கு எளியனான, ஞானபாலகனான குமரகோட்டத்து ஸ்ரீசுப்ரமண்யன் அடியவர்களை ஆட்கொள்ள தத்ரூப மாகக் காட்சி கொடுப்பவன். சிறுவனாக வந்து தனது அடிய வருக்கு ஒரு திருவிளையாடலை நடத்தினான் வடிவேலன். காஞ்சி புரத்திலுள்ள குமரகோட்டத்தில் சோமாஸ்கந்தமூர்த்தி என்ற அற்புதக் கடவுள் அம்மை அப்பருக்கு நடுவில் செல்லப் பிள்ளையாக வீற்றிருந்து அருள் பாலிக்கிறார். அடியார்களும் ஞானிகளும் மட்டுமன்றி, ஈசனும், உமையவளும், மகாவிஷ்ணுவுமே இந்தக் குமரகோட்டத்தை வலம் வருகிறார்கள். காஞ்சி நகரில் மாவடியின்கீழ் இருக்கும் ஏகாம்பர பெருமானும், மக்களுக்காக மண் ணுலகில் முப்பத்திரண்டு அறங்கள் இயற்றிய அன்னை காமாட்சியும், கச்சபேசப் பெருமானும், வரதராஜப் பெருமானும், பச்சைவண்ணரும், பவள வண்ணரும், உலகளந்த பெரு மாளும், வைகுந்தவாசனும் உற்சவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்களில் குமரகோட்டத்து ஞானச் செல்வனான குமரேச வள்ளலை வலம் வராமல் செல்வ தில்லை! திருப்புகழ் பாடி முருகன் புகழை திக்கெட்டும் ஒலிக்கச் செய்தவர் அருணகிரிநாதர். சண்முக கவசம் பாடி, ஆறுமுகனின் கருணையை அகிலமெலாம் பெறச் செய்தவர் பாம்பன் சுவாமிகள். இன்னொரு மகான் கச்சியப்பச் சிவாச்சாரியார் இந்தத் தலத்திலேயே வாழ்ந்து ஓர் அற்புதப் பணியை ஆற்றியிருக்கிறார். அவர் கந்த புராணத்தைப் பாடி அரங்கேற்றி யதும் இந்தக் குமரகோட்டத்தில் தான்.

முருகப் பெருமானின் சிறப்புக்களையும், திருவிளையாடல் களையும் தொகுத்து சிறப்பான புராணம் ஒன்றைப் படைக்க விரும்பிய சிவாச்சாரியார், கந்தனைத் தொழுது அவன் அரு ளுக்காக உருகி நின்றார். தொண்டர் பெருமை கூறும் பெரியபுராணம் பாடுவதற்கு "உலகமெலாம்" என்று ஈசன் முதல் பதம் எடுத்துக் கொடுத்தார். அதேபோல, கந்தபுராணம் எழுதுவதற்காக "திகட சக்கரச் செம்முகம்" என்று கந்தப் பெருமானும் அடி எடுத்துக் கொடுத்தார். ஒவ்வொரு நாளும் பாடியதை கந்தனுடைய சந்நிதியிலே வைத்து விட்டு இரவு போய் விடுவார். முருகன் அதனைப் படித்துப் பிழை திருத்தம் செய்து வைப்பார். இப்படியாக கந்த புராணத்தைப் பாடி முடித்து விட்டார். அதனைக் கந்தப்பெரு மான் சந்நிதியில் அரங்கேற்ற சித்தமாயிற்று. அரங்கேற்றம் தொடங்கியதும் அங்கிருந்த புலவர்கள் இதென்ன "திகட சக்கர" என்ற பதம்? இதற்குப் பொருள்கூறி மேலே தொடர்க என்றனர். "புலவர்களே1 இது பிரணவத்தின் பொருளான குமரனே அளித்த செஞ்சொல். அதற்கு விளக்கந் தரும் அருகதை யாருக்குண்டு? அதைப் பகுத்துப் பார்க்காமல் தொடர் வோம்" என்றார். மற்றப் புலவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதன் பொருள் தந்த பின்னரே அரங் கேற்றம் தொடரும் என்றனர். சபை கலைந்தது. ஆனால் சிவாச்சாரி யாரோ "முருகா! ஏன் இந்தச் சோதனை?" என்று புலம்பியவாறு ஊண் உறக்கமின்றி மண்ட பத்திலேயே கிடந்தார்.

மறுநாள் சபைகூடும்போது அனைவரும் வியப்புறும் வண்ணம் ஓர் இளம்புலவன் ஒளியில் விளைந்த உயர் ஞானமே போல சுவடியும், கையுமாக, "திகடசக்கர" என்ற பதத்திற்கு விளக்க மளிக்க சபையில் பிரசன்னமானான். இதோ இச்சுவடி வீரசோழியம் என்ற இலக்கண நூல் இதிலே 'ழ'கரம், 'ள'கரம் இரண்டிற்கும் முன்னால் 'த்'கரம் வந்தால் 'ட'கரம் ஆகும் என விதியுள்ளது போதுமா? என்றார் ஞானபண்டிதன் அவனையும் அவனது செம்முகத்தையும் கண்டதுமே அந்தப் பதத்தின் பொருள் அனைவருக்கும் புரிந்து போயிற்று. முருகன் அதன் பொருளை எடுத்தியம்பி சபையை மெய்மறக்கச் செய்து மறைந்து விட்டான். கச்சியப்பரின் கரங்கள் முருகனை நோக்கிக் குவிந்தன. ஒளிபோல வந்தவன் ஒளியாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடுதியில் மறைந்ததைக் கண்டு சபையோர் பெருமிதமும், விம்மிதமும் அடைந்து "அரோகரா, அரோகரா" எனப் போற்றி வணங்கினர். தன் அருளை ஒரு திரு விளையாடல் மூலம் உணர்த்தி கந்தபுராணத்தை தானே முன்னின்று அரங்கேற்றம் செய்யும் பேறுபெற்ற தலம் குமரகோட்டம்.

இங்கு பிரமனின் பிரணவ வழக்கு விவகாரமாய், தவமியற்றும் பிரமச்சாரிய கோலத்தில் திகழ்கிறார் குமரப்பெருமான். பிரணவமாய், பிரணவத்தின் பொருளாய், பிறவி நீக்கிப் பேரருள் புரியும் ஞானமாய், பிணி போக்கத் தவமியற்றும் கருணைப் பெரும் செல்வமாய் எம்பெருமான் எழுந்தருளியிருக் கிறார். இங்கு தீபாவளி தவிர ஆண்டுதோறும் தேன் அபிஷேகம் கொள்கிறார்.

"தீதறு தேன் நிகர் பேர ருளைப்பெற வந்தடைவீர் என் பாதங்களை" என்று தெய்வநாதன் நம்மை அழைக்கும் குறிப்பை அந்தத் தேனாபிஷேகத்தில் காணலாம். வினையகற்றும் வேல் கொண்ட வள்ளி காந்தனின் திருவருளைப் போற்றித் தொழுவோம்.

முருகப் பெருமான் தனை அடைந்த அன்பர்களுக்கு இனியவர், மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற ஞான முதல்வர், முனிவர்க்குத் தலைவர், சோதிசொரூபர், சிந்த னைக்கு எட்டாத பெருமான், பிரபஞ்சங்கள் அனைத்தையும் படைத்தவர். சிவபெருமான் தந்த கருணைக் கடவுள். தேவர்களுக் கெல்லாம் அதிதேவர், பகைவர்க்கு இடியேறு போன்றவர், வேற்படை யையுடைய நிர்மலர், பொய் அடிமை இல்லாத புலவர்களுக்கு எளிவந்த பெம்மான், பன்னிரு திருப்புயங்களையுடையவர், மும் மூர்த்திகளுமாய் நின்ற முதல்வர். அப்பெருமானை நாம் அடைக்கல மாக அடைய வேண்டும்.

குமரகோட்டத்து அழகா! குறைவிலா அருள்தரு முருகா! அருள்காட்டும் திருமுகம் ஆறு கொண்ட ஆனந்தா! அருள் மூர்த்தியே! குமரா சரணம்: அருளே சரணம்: என் அமுதே சரணம்: செவ்வேளே சரணம்: நின்சேவலே சரணம்: சக்திவேல் சரணம்: மயிலும் சரணம்: வேதப் பொருளே: வினை தீர்க்கும் வேலா: நின் அருள் திருப்பாதங்களே சரணம், சரணம்!

கச்சியப்பருக்கு அடியெடுத் துக் கொடுத்த கருணைத்தேவா! தந்தை சொல்லின் பெருமையை உலகுக்கு உணர்த்த தவம் செய்த கந்தா! சோமாஸ்கந்த நிலையில் தன் ஆலயத்தையே கொண்ட ஞான முருகா! கந்தபுராணம் அரங்கேறிய திருத்தலக்குமரா! தினந்தோறும் தேனாபிஷேகம் காணும் உமை பாலா! சிவமணிக்கு உபதேசித்த ஜெயமணியே, ஆறுமுகச் சிவனே, வித்தகா! உன் ஆடல் ஆர் அறிவாரோ!

நன்றி

(ஞானச்சுடர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடியாருக்காக கதிர்காமத்திலிருந்து நவாலி வந்த முருகன்

**நவாலியூர் நடேசன்**

இராசமணி என்னும் குடும்பத் தலைவி கதிர்காம முருகப் பெருமானால் ஆட்கொள்ளப்பட்டு மெய்ஞ்ஞானம் நிறைந்த தவவாழ்வு வாழ்ந்து அல்லற்பட்ட உள்ளங் களுக்கு ஆறுதல் அளித்து பக்தி அருளமுதினை ஊட்டி நவாலி மண்ணில் வாழ்ந்தார். அது நவாலி மண் செய்த புண்ணியம். அவர் தாபித்த முருகப்பெருமானது ஆலயத்தில் பஜனை, தியானம், பூஜை, திருவிழாக்கள் என பக்தி பிரவாகம் எந்நேரமும் சூழலைப் புனிதமாக்கிக் கொண்டிருக்கின்றன.

யோகசுவாமிகள் அவரை முதன்முதலில் கண்ட போது "குமரகுரு முருகா வருக" என்று விழித்து அழைத்தார். இராசமணி யாக இருந்து 'ஞானமணி'யாக மாறிய அவரை அடியார்கள் யோக சுவாமிகளின் வாக்கின்படி 'முருகன்' என்று அழைக்கத் தொடங்கினர்.

முருகன் முருகனாக வாழ்ந்து முருகனோடு கலந்து சமாதியான போது பக்தர்கள் அவ்வருக்கு கண்ணீர் மாலை சூடிய காட்சி இன்றும் மனதை நெகிழச் செய்கிறது.

அவ்வண்ணமே கதிர்காமம் என்று சொல்லும் போது பக்தர் களின் மனம் காலம் காலமாக இனிமையில் நெகிழ்ந்து வருகிறது.

"கதிரமலை காணாத கண் ணென்ன கண்ணே" என்று நவாலி சோமசுந்தரப்புலவர் பாடினார். "மணிதரளம் வீசி அணி அருவி சூழ மருவு கதிர் காமப் பெருமாள் காண்" என்று கதிர்காமக் கந்தப் பெருமான் மீது திருப்புகழ் மாலைகள் பல சூடிய அருணகிரிநாத சுவாமிகள் குறிப்பிட்டார்.

கதிர்காமத்திற்கு யாத்திரை செல்வதை "முருகப்பெருமானின் அழைப்பு", அவரின் அருள் என்ற நம்பிக்கை பக்தர்களிடம் பரம்பரை யாக இருந்து வருகிறது. கதிர்காமம் செல்வதற்கு இன்று பிரயாண வசதிகள், திருத்தமான வீதிகள் மின்சாரம், தொலைத் தொடர்பு என்று பல நவீன வசதிகள் இருக்கின்றன.

ஒரு காலத்தில் இத்தகைய வசதிகள் ஒன்றும் இல்லை. காட்டின் மத்தியில் கோவில் கொண்டிருந்த கந்தவேளைத் தரிசிப்பதற்காக பக்தர்கள் கொடிய விலங்குகள் நடமாடும் காட்டுப் பாதையைக் கால் நடையாகவும் அருந்தலாக இருந்த வாகன வசதிகள் மூலமும் கஷ்டங்களையெல்லாம் துச்சமாகத் தள்ளி யாத்திரை சென்றார்கள். எனவேதான் கதிர்காம யாத்திரை முருகப்பெருமானின் அழைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற உறுதியான நம்பிக்கை பக்தர்களின் மத்தியில் நிலைத்தது.

இன்று வெளியில் எங்கேயாவது புறப்பட்டால் கைத் தொலைபேசியில் மற்றவர்களுடன் தொடர்பு கொண்டவாறு பிரயாணம் செய்யலாம். கைத்தொலைபேசி இல்லாத அந்தக் காலத்தில் பக்தர்கள் முருகப் பெருமானுடன் மனத்தால் தொடர்பு கொண்டு அதை வழித்துணையாக்கிச் சென்றார்கள். காட்டு வழியில் யானை முதலிய மிருகங்கள் வழி மறித்தால் அல்லது வேறு இடர்கள் நேரிட்டால் முருகப்பெருமான் மானிட வடிவத்தில் வந்து காப்பாற்றியதாகவும், வழி தெரியாது திசை மாறியவர்களுக்கு அப்பனாகிய முருகன் வழி காட்டியதாகவும், பசி, தாகம் தீர்த்ததாகவும் இருள் அடர்ந்த காட்டில் ஒளி காட்டியதாகவும் பக்தர்கள் உருக்கத்தோடு சொன்ன அனுபவ வரலாறுகள் உண்டு.

இதனை சாதாரணமாக விளங்கிக் கொள்வது கஷ்டம். மன அழுக்கு களைப் புறந்தள்ளி முருகப் பெருமானின் திருவடிகளைச் சிந்தையில் இருத்தி இடரிலும் தளரிலும் அவரை விசுவாசமாக நம்புபவர்களின் அனுபவம் இது.

"மருவுமடியார்கள் மனதில் விளையாடும் மரகத மயூரப் பெருமாள் காண்"

என்பது அருணகிரிநாத சுவாமிகளின் அனுபவம்.

இராசமணியாகிய உன்னத பக்தையின் மனதில் முருகப்பெருமான் விளையாடினார். நாட்டில் மிக நெருக்கடியான ஒரு காலத்தில் கதிர்காமம் செல்ல முடியாதென்று பலர் பின்வாங்கினர். செல்வச் சந்நிதியில் தியானத்தில் இருந்த அம்மையாருக்கு ஒரு சிறுவன் வெள்ளி நூலைக் கொடுத்து "இதைப் பிடித்துக் கொண்டு வா" என்று சொல்ல அவர் எழுந்து அந்நூலைப் பிடித்துக் கொண்டு நடந்தார். வழியில் பலர் உபசரித்து தாகம் தீர்த்தார்கள். பயங்கரம் நடக்கிறது போக வேண்டாம் என்று சிலர் தடுத்தார்கள். அவர் நிற்கவில்லை. அதெல்லாம் அவருக்கு ஒரு கனவு போலவும் அற்ப துரும்பு போலவும் இருந்தன. அவர் மனதில் ஓர் ஆனந்த வெறி பிரவாகிக்க நடந்தார். கதிர்காம ஆலயத்தை அடைந்து வீழ்ந்து வணங்கினார். கதிரமலையில் தியானத்தில் இருந்த போது

"உனது இடத்திற்குப் போ நான் அங்கே வருவேன்" என்ற முருகனது அருள் வாக்கைக் கேட்டார். அதன்படி நவாலிக்கு திரும்பினார். கதிர்காமப் பெருமான் அருளால் கிடைத்த வேலை, சிறு கோவிலைக் கட்டி அதிலே ஸ்தாபித்தார். நவாலி கதிர்காமமாக அருளொளி வீசத்தொடங்கியது. மிகவும் தொலைவில் இருந்து பக்தர்கள் கோவிலுக்கு வந்து பக்தி சிரத்தையோடு வழிபட்டு வந்தார்கள். குருமுருகன் அவர்களுக்கு விபூதி இட்டு ஆசீர்வதித்தமையால் மாறாத பிணிகள், மனத்துயரங்கள் முதலிய வற்றால் அல்லலுற்றோர் அவைகள் நீங்கப் பெற்று பக்தி விசுவாசம் மிக்க புது வாழ்வு பெற்றார்கள். முருகனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலும் விசாலமாகக் கட்டப் பெற்று இன்று அழகுடன் திகழ்கிறது.

முருகப்பெருமான் தமிழ்த் தெய்வம். தன் மீது பக்தி செலுத்து வோருக்கு தமிழ்ச் செல்வத்தை அள்ளிக் கொடுப்பவர்.

"செகதலமும் வானும் மிகுதி
பெறு பாடல்
தெரிதரு குமாரப் பெருமாள்
காணி"

என்று கதிர்காமக் கந்தன் திருப்புகழில் அருணகிரிநாதப் பெருமான் குறிப்பிடுகிறார்.

"மொய்தார் அணிகுழல்
வள்ளியை வேட்டவன்
முத்தமிழால் வைதாரையும்
வாழ வைப்பான்"

என்றெல்லாம் அருணகிரி நாதப் பெருமான் தனது ஆனந்த அனுபவத்தை பாடி மகிழ்கிறார்.

திருமுருகாற்றுப்படை முருகனை "பலர் புகழ் நன்மொழிப் புலவர் ஏறே" என்றும் "நூலறி புலவ" என்றும் போற்றுகின்றது. புலவன் என்ற சொல் முருகனுக்குரியதாக நூல்கள் குறிப்பிடுகின்றன. புலவு - பேரறிவு, மெய்ஞ்ஞானம்.

கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணம் எழுதுவதற்கு முருகப் பெருமான் தனக்கு திருத்தி உதவி யதை "பாவலர்க் கெளியாய் ஒலம்" என்று பாடியதன் மூலம் வெளிப் படுத்துகின்றார்.

முத்தமிழ்த் தெய்வமான முருகப்பெருமான் கதிர்காமம் செல்ல இயலாதவர்களுக்கு இரங்கி காட்சி கொடுத்து அருள்வதற்காகத் திருவுளம் கொண்டு இராசமணி அம்மையார் என்னும் 'முருகன்' அழைப்பை ஏற்று நவாலிக்கு வந்தார் என்பதே இங்குள்ள முருகன் அடியார்களின் நம்பிக்கையாகும். எனவே கதிர்காமக் கந்தனை வழி பட்டு இன்ப வாழ்வு பெறுவோமாக.

## பிரார்த்தனையின் பலம்

ஒரு முனிவரும் அவருடைய சீடரும் ஒரு சமயம் காட்டின் வழியே சென்று கொண்டிருந்தனர். பொய்கை ஒன்றைக் கண்ட முனிவர் அதில் குளித்துவிட்டு பிரார்த்தனை செய்யத் தொடங்கினார். அப்போது ஒரு சிங்கத்தின் கர்ஜனை கேட்கவே சீடன் பயந்து ஒரு மரத்தில் ஏறிக் கொண்டான். குருவோ ஏதுமறியாது பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார். சிங்கம் அவர் அருகில் வந்து பார்த்துவிட்டு ஒன்றும் செய்யாது போனது. பிரார்த்தனை முடிந்ததும் முனிவர் சீடனுடன் ஊருக்குப் போனார். அப்போது ஒரு காளை மாடு மூர்க்கமாகப் பாய்ந்து வந்தது. முனிவர் பயந்து விலகி ஓடினார். அதைப் பார்த்த சீடன் காட்டில் சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்டும் அமைதியாக பிரார்த்தனையில் இருந்த நீங்கள் இப்போது காளை மாட்டுக்கு பயப்பட்டுவிட்டீர்களே" என்றான். முனிவர் "நான் அப்பொழுது பிரார்த்தனையில் கடவுளின் அருகில் இருந்தேன். இப்பொழுது மனிதனுடன் மாயையில் இருக்கிறேன்" என்றார்.

- பகவான் ராமகிருஷ்ண பரம ஹம்சர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருபரன்

நவாலியூரிலே கதிர்காம முருகன் குருவாக வந்து அடியார்களை ஆண்டு கொண்டு பல பல அற்புதங்கள் நடாத்திக் காட்டியதை அடியார்கள் கூட்டம் அறியும். சின்ன முறுவலுடனும், சிங்காரப் பேச்சுடனும் அழகிய போர்வையுடனும் உலாவி வந்து

"சேவேறு சுற்ற மாஞான போதபத்தி

சீராகவே யுரைத்த குருநாதா" என்ற திருப்புகழ் வரிக்கிணங்க நம்மையெல்லாம் நேராக வாழ வைத்த விந்தையைக் கூறிமுடியாது. இக்கருத்தைத் தான் மாணிக்க வாசகர் "அப்பன் ஆண்டு கொண்டு தன் அடியாரிற் கூட்டிய அதிசயம் அறியேனே" என்று கூறியுள்ளார்.

திருப்புகழ் பெருந்தகை அருணகிரியார் பதினாறாயிரம் திருப்புகழைப் பாடியுள் ளார். அதில் பல பல இடங்களில் குருநாதா, குருபரா எனப் பாடியுள்ளார். "எனது மனது பதமுற உனது பாதத்தைத் தருவாயே" என அன்புடன் அழைக்கின்றார். "அமலை அடியவர் கொடிய வினைகொடு அபயமிடுகுரல் அறியாயோ" என முறை யிடும் அழகு சொல்லி முடியாது. "அபகார நிந்தை பட்டுழலாதே..." என்னும் திருப்புகழில் "செபமாலை தந்த சற்குருநாதா" என முருகன் தனக்கு செபமாலை அருளியதைப் பாடுகிறார். அத்துடன் "பாதபங்கய முற்றிட உட்கொண்டோதுகின்ற திருப் புகழ் நித்தம் பாடும் அன்பது செய்பதியில் தந்தவன் நீயே" எனப் பாடுகிறார். அதே போலவே இன்றும் "கதிர்காம முருகன் பஜனைக்குழு அன்பர்கள்" என்னும் நாமத்துடன் முருகன் பாடும் திறத்தைத் தந்தார் எனக் கூறி அன்பாகப் பாடுவதைக் காணலாம்.

குருநாதன் என்பவர் எங்களையெல்லாம் பல பல துன்பக் கடலிலிருந்தும் கரையேற்றும் ஓடக்காரன் ஆகும்.

"யாது நிலை யற்றலையும் எழு பிறவிக் கடலை எறவிடும் நற்கருணை ஓடக்காரன்" என அருணகிரியார் தனது திருவேளைக் காரன் வகுப்பில் பாடுவதைக் காணலாம். அகத்தியர்க்கும் அருணகிரிக்கும் தெய்வத்தில் மேலான தெய்வமாகிய பரம சிவனுக்கும் முருகன் குருவாக இருந்து ஞானோபதேசம் புரிந்தார்.

எனவே, "கதிர்காம முருகன் கோவில்" என அழகிய பெயருடன் நவாலியில் கோயில் கொண்டு தகமை சிவஞானமுத்தி தரவந்த முருகன் திருவடிகளை வணங்கி அவனருளால் அவனைப் பாடி இன்பற்று வாழ்வோமாக.

– தொண்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீகதிர்காம முருகன் ஆலய புனரமைப்பு வேலைக்கான வரவு

| | | |
|---|---|---|
| 01. வி. ஜெயவண்ணன் | நவாலி | 5000.00 |
| 02. இ. சசிதரன் | திருகோணமலை | 15000.00 |
| 03. க. சுதாகரன் | லண்டன் | 10000.00 |
| 04. ம. செல்வரட்ணம் | நவாலி | 3000.00 |
| 05. கை. சிவப்பிரியா | ஆனைக்கோட்டை | 10000.00 |
| 06. செ. பரமகுரு | நவாலி | 1003.00 |
| 07. செ. ரமேஸ் | நவாலி வடக்கு | 2300.00 |
| 08. ர. பிரேமிளா | நவாலி | 1000.00 |
| 09. சி. சிதம்பரம் | ஆனைக்கோட்டை | 1500.00 |
| 10. ச. ரேணுகா | ஆனைக்கோட்டை | 1000.00 |
| 11. அன்பர் | நவாலி | 15000.00 |
| 12. கே. சிவாஜினி | நவாலி | 500.00 |
| 13. மா. இரத்தினம் | நவாலி | 1000.00 |
| 14. அ. தேவராணி | நவாலி | 500.00 |
| 15. செ. இராதாகிருஸ்ணன் | நவாலி | 1000.00 |
| 16. க. செந்தூரன் | நவாலி | 2000.00 |
| 17. க. மோகன் | நவாலி | 1000.00 |
| 18. ந. ராகவன் | நவாலி | 5000.00 |
| 19. கு. விதுசாந் | வேலணை | 1005.00 |
| 20. ச. பழனிவேல் | மானிப்பாய், சங்குவேலி | 10000.00 |
| 21. க. கந்தசுவாமி | நவாலி | 2000.00 |
| 22. க. நேசரத்தினம் | நவாலி | 2000.00 |
| 23. ஆ. சிவராசா | நவாலி | 5000.00 |
| 24. கி. சுபீகரன் | நவாலி | 5000.00 |
| 25. சி. நாகம்மா | நவாலி | 2000.00 |
| 26. க. நடேசன் | நவாலி | 1000.00 |
| 27. அ. வேல்நாயகி | நவாலி | 1000.00 |
| 28. கா. கனகசபாபதி | நவாலி | 2000.00 |
| 29. பி. நாகசொரூபி | நவாலி | 10000.00 |
| 30. சி. பரராஜசிங்கம் | நவாலி | 5000.00 |
| 31. ப. இரவீந்திரன் | நவாலி | 2000.00 |
| 32. ச. அன்னமுத்து | நவாலி | 1000.00 |
| 33. கை. சிவசுப்பிரமணியம் | ஆனைக்கோட்டை | 5000.00 |
| 34. மு. லோகேஸ்வரன் | நவாலி | 20000.00 |
| 35. செ. ஜெயகுமார் | நவாலி | 2000.00 |
| 36. ந. நித்தியானந்தம் | நவாலி | 5000.00 |
| 37. ந. நல்லையா | நவாலி | 1000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 38. நகுலேஸ்வரன் அகிலா | நவாலி | 1000.00 |
| 39. மா. கணேசன் | நவாலி | 25000.00 |
| 40. இ. மனோகரன் | நவாலி | 5000.00 |
| 41. இ. கஜேந்தினி | நவாலி | 3000.00 |
| 42. க. சண்முகராசா | வேலணை | 1000.00 |
| 43. வே. கனகசுந்தரம் | நவாலி | 2000.00 |
| 44. மு. செல்வராசா | நவாலி | 500.00 |
| 45. பிரபுதர்ஷன் தர்ஷிகா | நவாலி | 5000.00 |
| 46. த. தமிழ்ச்செல்வி | நவாலி | 2000.00 |
| 47. ச. சாந்தகௌரி | நவாலி | 500.00 |
| 48. பொ. சந்திரசேகரம் | நவாலி | 1000.00 |
| 49. மா. கந்தசாமி | நவாலி | 2000.00 |
| 50. சி. ஜெயராசா | நவாலி | 5000.00 |
| 51. செ. தவகுலம் | நவாலி | 5000.00 |
| 52. ச. சுப்பிரமணியம் | நவாலி | 5000.00 |
| 53. க. நாகலிங்கம் | நவாலி | 2000.00 |
| 54. க. துவாரகன் | நவாலி | 500.00 |
| 55. இ. செல்வமணி | நவாலி | 5000.00 |
| 56. கி. இரவிக்குமார் | வவுனியா | 500.00 |
| 57. மு. பரஞ்சோதி (பவளம்) | நவாலி | 3000.00 |
| 58. இ. வாகீஸ்வரன் (ஐயா) | ஆனைக்கோட்டை | 2000.00 |
| 59. செ. கோகுலாந்தன் | நவாலி | 2000.00 |
| 60. க. மனோகரன் | சுவிஸ் | 5000.00 |
| 61. ம. கனகம்மா | நவாலி | 1000.00 |
| 62. த. இலக்ஷியா | நவாலி | 1000.00 |
| 63. க. அமுதன் | லண்டன் | 5000.00 |
| 64. செ. செல்வரத்தினம் (பவளம்) | நவாலி | 500.00 |
| 65. மா. பானுகோபன் | நவாலி | 2000.00 |
| 66. பி. வைஷ்ணா | நவாலி | 3002.00 |
| 67. மு. பாலசுப்பிரமணியம் | நவாலி | 6000.00 |
| 68. சு. சுபேதா | ஆனைக்கோட்டை | 1000.00 |
| 69. நா. பகீரதன் | நவாலி | 2000.00 |
| 70. ச. அன்னமுத்து | நவாலி | 1000.00 |
| 71. செ. மகேந்திரன் | நவாலி | 5000.00 |
| 72. நா. சரத்சந்திரன் | நவாலி | 1000.00 |
| 73. தெ. வளர்மதி | நவாலி | 2000.00 |
| 74. சு. மார்க்கண்டு | நவாலி | 1000.00 |
| 75. இ. கற்பகவல்லி | நவாலி | 1000.00 |
| 76. கி. சந்திரலிங்கம் | நவாலி | 1000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 77. இ. ஆறுமுகம் | திருகோணமலை | 1000.00 |
| 78. க. சிவானந்தராசா | நவாலி | 1000.00 |
| 79. க. தினேஸ் | நவாலி | 1000.00 |
| 80. சி. விக்கினேஸ்வரி | நவாலி | 1000.00 |
| 81. செ. இராமநாதன் | ஆனைக்கோட்டை | 1000.00 |
| 82. சி. கமலேந்திரன் | கனடா | 15000.00 |
| 83. இ. கண்மணி | நவாலி | 2000.00 |
| 84. இ. கந்தசாமி | நவாலி | 10000.00 |
| 85. மு. அருணாசலம் | நவாலி | 3000.00 |
| 86. ஐ. கோபாலகிருஸ்ணன் | நவாலி | 1000.00 |
| 87. செ. நடேசன் | நவாலி | 1000.00 |
| 88. கா. சின்னத்துரை | நவாலி | 1000.00 |
| 89. ந. அமிர்தநாதன் | நவாலி | 10000.00 |
| 90. செ. சரத்சந்திரன் | நவாலி | 5000.00 |
| 91. செ. சுஜிதரன் | நவாலி | 2000.00 |
| 92. நா. கதிரவேலு | கீரிமலை | 2000.00 |
| 93. செ. கந்தசாமி(முருகையா) | நவாலி | 2000.00 |
| 94. சி. மோகன்ராஜ் | நவாலி | 1000.00 |
| 95. பொ. சிவபாக்கியம் | நவாலி | 2000.00 |
| 96. சி. சிதம்பரம் | ஆனைக்கோட்டை | 1500.00 |
| 97. ச. ரேணுகா | ஆனைக்கோட்டை | 1000.00 |
| 98. சி. கந்தசாமி | ஆனைக்கோட்டை | 5000.00 |
| 99. சி. ஸ்ரீகருணை | நவாலி | 3000.00 |
| 100. ச. அருள்சோதிராசா | நவாலி | 5000.00 |
| 101. திருமதி.ப.தேவமனோகரன் | நவாலி | 3000.00 |
| 102. ந. கலாநிதி | | 1000.00 |
| 103. சி. இராஜசிறி | | 750.00 |

1) வேலுப்பிள்ளை செல்வராசா குடும்பம் நவாலி
லெவல்சீற் உபயம் 165000.00

2) இராசரத்தினம் சசிகரன் குடும்பம் திருகோணமலை
பெயின்ற் வேலை உபயம் 185000.00

1) தர்சிகா புடவைக் கடை – 6 பைக்கற் சீமெந்து
2) செ. ரமேஸ் 2 பனை மரங்கள்

குறிப்பு : நிதி மற்றும் வேறு பொருட்கள் வழங்கியவர்களின் பெயர் இடம்பெறாவிட்டால் ஏற்பட்ட தவறுக்கு மன்னிக்கும்படி அன்புடன் வேண்டி, உதவிய அனைவர்க்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

– தொண்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 1) ச. சுவேதா | நவாலி | 1000.00 |
| 2) க. அப்பர் | நவாலி | 3000.00 |
| 3) மா. மீனலோசனி | நவாலி | 1000.00 |
| 4) மா. நிர்மலாதேவி | நவாலி | 1000.00 |
| 5) ந. சிவாஜி | நவாலி | 1000.00 |
| 6) சி. சிவரூபன் | றூபன் பிறிண்டேர்ஸ் ஆனைக்கோட்டை. | 2000.00 |
| 7) பாலகோபன் | நவாலி | 1000.00 |
| 8) சி. பரமசிவம் | நவாலி | 1000.00 |
| 9) க. வரதராசா | நவாலி | 2000.00 |
| 10) கி. சிவசுந்தரம் யோகராணி | நவாலி | 5000.00 |
| 11) க. கணேசன் | நவாலி | 5000.00 |
| 12) ஐ. யோகேஸ்வரன் | நவாலி | 10000.00 |
| 13) ப. செந்தில்குமார் | சுவிஸ் | 2000.00 |
| 14) எஸ். சந்திரகுமார் | U.K | 5000.00 |
| 15) செ. நாகரத்தினம் | நவாலி | 3000.00 |
| 16) த. சுவாமிநாதபிள்ளை | நவாலி | 500.00 |

கண்ணன் சிலை உபயம் : ப. பகீரதன் நவாலி

மண்டபக்கேற் கூலி உபயம் : சுதர்சன் நவாலி (சுகாஜினி வெல்டிங் வேக்சொப், ஆனைக்கோட்டை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குரு முருகன் சமாதிக்கோயில்

நூயன் பிறிண்டேர்ஸ் ஆனைக்கோட்டை. யாழ்ப்பாணம் 0776624386

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org